**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.68/21**
**வழக்கு சாட்சி – அ.சா.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூங்கொடியான் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.23

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் அல்லிநகரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிளாஸ்டிக் வேலை செய்துவருகிறேன். எதிரி எனது மகன் ஆவார். சுமார் 3 வருடம் இருக்கும் ஒருநாள் காவல்நிலையத்திலிருந்து எனக்கு போன் வந்தது. எனது வண்டி விபத்து ஏற்படுத்திவிட்டதாகவும் என்னை வரும்படி அழைத்தார்கள். நான் காவல்நிலையம் சென்றேன். டிரைவர் ஓடிவிட்டதால் என் மகனை கொண்டு வந்து ஒப்படைக்க சொன்னார்கள். அந்த சமயத்தில் என் மகன் கேரளாவிற்கு வேலைக்கு சென்றிருந்தான். எனது மகனை அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்றேன். அங்கு வழக்கு பதிவு செய்துவிட்டதாக சொன்னார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடந்தது சம்மந்தமாக எனது மகன் எனக்கு போன் பண்ணவில்லை. விபத்து நடந்த விபரம் போலிசார் சொல்லி தான் எனக்கு முதன்முதலில் தெரியும் என்றால் சரிதான். விபத்துநடந்த வண்டியில் நான் பிளாஸ்டிக் வியாபாரம் பார்த்து வந்தேன். டிரைவர் வைத்து வாகனத்தை ஓட்டி வந்தேன். யார் வாகனத்தை ஓட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது.